**கேந்திர நகரங்கள் அபிவிருத்தி செயற்திட்டம் (எஸ்சீடீபீ) - 2022**

-----------------------------------------------------------------------------------------------------------------

கேந்திர நகரங்கள் அபிவிருத்தி செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் (IDA) 2014 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 5428- எல்கே ஆம் இலக்க நிதியளிப்பு உடன்படிக்கையின் II(பீ)(3) ஆம் பிரிவு மற்றும் 2016 யூலை 20 ஆந் திகதிய 5800-எல்கே ஆம் இலக்க திருத்தப்பட்ட நிதியளிப்பு உடன்படிக்கை என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்தது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந ்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் செயற்திட்டத்தின் காலப்பகுதி**

செயற்திட்டத்தின் நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம் முன்னாள் நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சின் தற்போதைய நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு அமுல்படுத்தும் முகவராக இருந்ததுடன் கேந்திர நகரங்கள் அபிவிருத்தி செயற்றிட்டம் (SCDP) செயற்திட்டத்தை அமுல்படுத்தும் முகவர் நிறுவனமாகும். இலங்கையில் பங்குபற்றல் நகர பிராந்தியங்களில் தெரிவு செய்யப்பட்ட நகர சேவைகள் மற்றும் பொது நகர இடவசதிகளை முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 34,912.48 மில்லியனுக்கு சமமான அ.டொலர் 257.08 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 27,507 மில்லியனுக்கு சமமான அ.டொலர் 202 மில்லியன் தொகையை வழங்குவதற்கு சர்வதேச அபிவிருத்தி நிறுவனம் (IDA) இணங்கியிருந்தது. மிகுதித் தொகையான ஐ.அ.டொலர் 55 மில்லியனுக்கு சமமான ரூபா 7,405.48 மில்லியன் தொகை இலங்கை அரசாங்கத்திலிருந்து நிதியீட்டம் செய்வதற்கு இணங்கப்பட்டிருந்தது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2014 மே 05 ஆம் திகதி ஆரம்பித்திருந்ததுடன் 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் பூர்த்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. மேலும் 2016 யூலை 20 ஆம் திகதிய இலக்கம் 5800-LK என்ற மேலதிக நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம் சர்வதேச அபிவிருத்தி நிறுவனம் (IDA) இனால் யாழ்ப்பாண நகரத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கத்திற்காக எஸ்ஈடீ 39.90 மில்லியனுக்கு (அ.டொலர் 55 மில்லியன்) சமமான ரூபா 8,250 மில்லியன் தொகையான நிதி ஏற்பாட்டை வழங்குவதற்கு இணங்கியிருந்தது. எனினும் செயற்திட்டத்தைப் பூர்த்தி செய்யும் காலம் 2022 யூன் 30 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டிருந்த போதும் 2022 திசம்பர் 31ஆம் திகதி செயற்திட்டம் நிறுத்தப்பட்டிருந்தது.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து, செயற்திட்டத்தின் நிதிக் கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலைமையினையும் மற்றும் அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றை விடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்கள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபட்டவர்களை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல | கணக்கீட்டு குறைபாடுகள்/ கணக்காய்வு அவதானிப்புக்கள் | தொகை ரூபா. மில்லியன | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 5 இன் 43(அ) பிரிவின் பிரகாரம் நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்படுகின்ற சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் நிதிலைமைக் கூற்று தயாரிக்கும் திகதியில் காணப்படுகின்ற அந்நியச் செலாவணி விகிதத்திற்கு மாற்றப்படல் வேண்டும். எனினும் மேற்கூறப்பட்ட தேவையின் பிரகாரம் செயற்திட்டத்தின் வெளிநாட்டு கடன் தொடர்பாக அந்நியச் செலாவணி சீராக்கம் (Parity Adjustment) மீளாய்வாண்டிற்காக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2,651 | எதிர்காலத்தில் செயற்திட்டத்தைப் பூர்த்தி செய்யும் கணக்குகள் தயாரிக்கும் போது இந்த சீராக்கங்கள் கவனத்திற் கொள்ளப்படும். | அந்நியச் செலாவணி சீராக்கம் நிதிக் கூற்றுக்களுக்கு கொண்டுவரப்படல் வேண்டும். |
| (ஆ) | சொத்துக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சிற்கு கையளிக்க வேண்டிய சொத்தாக நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட போதிலும் அந்த சொத்துக்கள் 2023 ஒக்டோபர் 31 ஆம் திகதி வரையிலும் அமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை. | 5.20 | பூர்த்தி செய்யும் கட்டத்தின் போது முழு சொத்துக்களையும் கையளித்தல் வசதியினமாக இருந்தது. எனினும் எதிர்காலத்தின் போது செயற்திட்டத்தை பூர்த்தி செய்யும் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரியான நடைமுறைகள் பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சகல செயற்திட்ட சொத்துக்களும் உரிய நிறுவனத்திற்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் செயற்திட்டத்திற்கு எதிராக சட்ட ரீதியான எட்டு நடவடிக்கைகள் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தது. எனினும் நிதி நிலைமைக் கூற்றில் அது வெளிப்படுத்தப்படாதிருந்ததுடன் சட்ட ரீதியான வழக்குகளின் தற்போதைய நிலைமை தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | | நீதிமன்றத் தீர்ப்பு வழங்கப்படும் வரை எங்களுக்கு உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | எதிர்பார்க்கப்பட்ட நிகழகத்தக்கவைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |
| (ஈ) | ரூபா 277.19 மில்லியன் நிலுவைப் பட்டியலுக்காக நிதிக் கூற்றுக்களில் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் விளைவாக நிதிக் கூற்றுக்கள் அப்பெறுமானத்தால் பொறுப்புக்கள் குறைமதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | 277.19 | பதிலளிக்கப்படவில்லை. | நிலுவைப் பட்டியல்களுக்காக நிதிக்கூற்றுக்களில் நிதிஏற்பாடுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

| **கணக்கீட்டு குறைபாடுகள்/ கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **தொகை ரூபா. மில்லியன்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **கணக்காய்வாளரின் பரிந்துரை** |
|---|---|---|---|
| ரூபா 18,364 மில்லியன் பெறுமதியான பூர்த்தி செய்யப்பட்ட 85 செயற்திட்டங்கள் மற்றும் ரூபா 352 மில்லியன் பெறுமதியான பூர்த்தி செய்யப்படாத 02 செயற்திட்டங்கள் 20 நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டிருந்தது. எனினும் இந்த செயற்திட்டம் வரிசை அமைச்சின் செயலாளரால் முறையானதாக கையேற்கப்பட்டிருக்கவில்லை. மேலும் கையளிக்கப்பட்ட செயற்திட்டங்கள் அந்த நிறுவனங்களின் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்ததா என உறுதிப்படுத்துவதற்கு உரிய சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | 18,364 | உரிய நிறுவனங்களில் கையேற்கும் சான்றுதழைப் பெற்றுக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய நிறுவனங்களிலிருந்து உறுதிப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்டத்தின் நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

| கூறு | தாமதம்/ கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| 01 | **கூறு இலக்கம் 01 - கண்டி நகர அபிவிருத்தி** | | |
| (அ) | கண்டி நகரத்தில் போக்குவரத்தை வலுப்படுத்துவதற்கும், அதனைக் கவர்ச்சிகரமான சுற்றுலா நகரமாக உட்படுத்துவதற்கும் அ.டொலர் 62.08 மில்லியனுக்கு சமமான ரூபா 8,070.40 மில்லியன் தொகையொன்று மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 5,781.67 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. எனினும் இந்த பிரிவின் கீழ் அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்ட 03 பேரூந்து முனையங்களை நிர்மாணித்தல், நீண்டகால போக்குவரத்து திட்டமொன்றைத் தயாரித்தல் மற்றும் சுற்றாடல் நியமம், போக்குவரத்து வசதிகள் மற்றும் பாதுகாப்பு நியமங்களை தயாரித்தல் போன்ற உப செயற்திட்டகளைப் பூர்த்தி செய்வதற்கு செயற்திட்டத்திற்கு முடியாதிருந்தமை காரணமாக இந்த கூறிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது. | செயற்றிட்டத்தின் மூலம் தயாரிக்கப்பட்ட 2022.06.10 ஆம் திகதிய இந்த அவதானிப்பை அமுல்படுத்தும் பூர்த்தி அறிக்கை மற்றும் 2022 ஆகஸ்ட் மாதம் உலக வங்கி அமுல்படுத்தும் பூர்த்தி அறிக்கை மூலம் தெளிவாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. | பொது மக்களுக்கு எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் மற்றும் நலன்களை அடைந்து கொள்வதற்காக செயற்திட்ட கால எல்லையில் கடன் நிதியத்தை ஆக்கபூர்வமானதாக பயன்படுத்துதல் வேண்டும். |
| (ஆ) | செயற்திட்டத்தின் பிரதான பிரிவான கண்டி பல்நோக்கு போக்குவரத்து நிலையம் (KMTT) நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் ஒப்பந்தப் பெறுமதி ரூபா 10,500 மில்லியன் ஆக இருந்ததுடன் 2022 திசெம்பர் 31 வரையில் ரூபா 202.99 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக காணி கைப்பற்றல்களுக்காகவும் ரூபா 686.35 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. எனினும் திட்டமிடப்பட்ட பிரகாரம் இந்த செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்தமையின் காரணமாக 2022 மே 31 ஆம் திகதி மிகுதி வேலை செயற்பாடுகளை செய்வதற்கு போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அபிவிருத்தி அமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருந்தது. | செயற்றிட்டத்தின் மூலம் தயாரிக்கப்பட்ட 2022.06.10 ஆம் திகதிய இந்த அவதானிப்பை அமுல்படுத்தும் பூர்த்தி அறிக்கை மற்றும் 2022 ஆகஸ்ட் மாதம் உலக வங்கி அமுல்படுத்தும் பூர்த்தி அறிக்கை மூலம் தெளிவாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. | பொது மக்களுக்கு எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் மற்றும் நலன்களை அடைந்து கொள்வதற்காக செயற்திட்ட கால எல்லையில் கடன் நிதியத்தை ஆக்கபூர்வமானதாக பயன்படுத்துதல் வேண்டும். |
| (இ) | ஆரம்ப சந்தர்ப்பத்தின் போது கெடம்பே மிற்றாவல மற்றும் தென்னங்கும்புற பிரதேசங்களில் 03 பேரூந்து முனையங்களை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அந்த செயற்திட்டத்தை அமுல்படுத்தாமல் ஆரம்ப சந்தர்ப்பங்களின் போது இணங்காணப்படாத போகம்பர, டொரிங்டன் மணிக்கூட்டு கோபுர பேரூந்து நிலைய நிர்மாணத்திற்காக ரூபா 276.54 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் கண்டி தெற்கு பேரூந்து டிப்போவை நிர்மாணிப்பதற்காக 127.18 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. | செயற்றிட்டத்தின் மூலம் தயாரிக்கப்பட்ட 2022.06.10 ஆம் திகதிய இந்த அவதானிப்பை அமுல்படுத்தும் பூர்த்தி அறிக்கை மற்றும் 2022 ஆகஸ்ட் மாதம் உலக வங்கி அமுல்படுத்தும் பூர்த்தி அறிக்கை மூலம் தெளிவாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. | பொது மக்களுக்கு எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் மற்றும் நலன்களை அடைந்து கொள்வதற்காக செயற்திட்ட கால எல்லையில் கடன் நிதியத்தை ஆக்கபூர்வமானதாக பயன்படுத்துதல் வேண்டும். |
| (ஈ) | இந்த செயற்றிட்டத்தின் மூலம் இலங்கை புகையிரத திணைக்களத்திற்காக நான்கு மாடிகளையுடைய கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 238 மில்லியன் தொகையும், புதிய மர வேலைத்தள கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 113 மில்லியன் தொகையும் செலவிடப்பட்டிருந்ததுடன் அந்த நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் ரூபா | செயற்றிட்டத்தின் மூலம் தயாரிக்கப்பட்ட 2022.06.10 ஆம் திகதிய இந்த அவதானிப்பை அமுல்படுத்தும் பூர்த்தி அறிக்கை மற்றும் 2022 ஆகஸ்ட் மாதம் உலக வங்கி அமுல்படுத்தும் பூர்த்தி | பொது மக்களுக்கு எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் மற்றும் நலன்களை அடைந்து கொள்வதற்காக செயற்திட்ட கால எல்லையில் கடன் |

| | | | |
|---|---|---|---|
| | 88.46 மில்லியன் பெறுமதியான மிகுதி வேலைகளை பூர்த்தி செய்வதற்காக செயற்றிட்டம் நகர அபிவிருத்டதி மற்றும் வீடமைப்பு அமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருந்தது. | அறிக்கை மூலம் தெளிவாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. | நிதியத்தை ஆக்கபூர்வமானதாக பயன்படுத்துதல் வேண்டும். |
| (உ) | செயற்றிட்ட ஆரம்பத்தின் போது கண்டி மாவட்டத்தில் 25 கிலோமீட்டர் வீதியினை அபிவிருத்தி செய்வதற்கு செயற்றிட்டம் இனங்காணப்பட்டிருந்த போதிலும் விஷேட விடயப்பரப்பு திருத்தப்பட்டதன் பின்னர் 09 கிலோ மீட்டர் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | செயற்றிட்டத்தின் மூலம் தயாரிக்கப்பட்ட 2022.06.10 ஆம் திகதிய இந்த அவதானிப்பை அமுல்படுத்தும் பூர்த்தி அறிக்கை மற்றும் 2022 ஆகஸ்ட் மாதம் உலக வங்கி அமுல்படுத்தும் பூர்த்தி அறிக்கை மூலம் தெளிவாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. | பொது மக்களுக்கு எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் மற்றும் நலன்களை அடைந்து கொள்வதற்காக செயற்திட்ட கால எல்லையில் கடன் நிதியத்தை ஆக்கபூர்வமானதாக பயன்படுத்துதல் வேண்டும். |
| | (i) வெளியே மற்றும் உள்ளே உப வீதிகளை மறுசீரமைப்பதன் கீழ் கட்டுகஸ்தோட்டை, கொஹாகொட, பேராதனை என்பவற்றில் 07 கிலோ மிற்றர் வீதிகளை அபிவிருத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அந்த செயற்றிட்டம் முழுமையாக அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| | (ii) கட்டுகஸ்தோட்டை – மடவளை – பாபரல்ல வீதி மற்றும் தர்மாசோக மாவத்தை என்பவற்றை அபிவிருத்தி செய்யும் செயற்றிற்றத்திற்காக முறைறே ரூபா 1,614.94 மில்லியன் மற்றும் ரூபா 796.43 மில்லியன் தொகையில் ஒப்பந்தம் கையளிக்கப்படடிருந்தது. எனினும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இந்த ஒப்பந்தத்திற்காக ரூபா 907.16 மில்லியன் தொகை அசலவிடப்பட்டிருந்த போதிலும் அந்த செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்பட்டிருந்தது. | | |
| (ஊ) | கூறு 1.2 இன் கீழ் கழிவு நீர் வடிகாண் முறைமையை புனரமைப்பதற்காக அ.டொலர் 18.6 மில்லியனுக்கு சமமான ரூபா 2,418 மல்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும் இந்த கூறிற்காக ரூபா 522.22 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் பூர்த்தி செய்யப்பட்ட 04 உப செயற்றிட்டங்கள் கண்டி மாநகர சபைக்கு கையளிக்கப்படடிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | செயற்றிட்டத்தின் மூலம் தயாரிக்கப்பட்ட 2022.06.10 ஆம் திகதிய இந்த அவதானிப்பை அமுல்படுத்தும் பூர்த்தி அறிக்கை மற்றும் 2022 ஆகஸ்ட் மாதம் உலக வங்கி அமுல்படுத்தும் பூர்த்தி அறிக்கை மூலம் தெளிவாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. | பொது மக்களுக்கு எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் மற்றும் நலன்களை அடைந்து கொள்வதற்காக செயற்திட்ட கால எல்லையில் கடன் நிதியத்தை ஆக்கபூர்வமானதாக பயன்படுத்துதல் வேண்டும். |
| | (i) கூறு 1.2.1, 1.2.2 மற்றும் 1.2.3 இன் கீழ் கெட்டெம்பே நீர் சுத்திகரிப்ப கூடத்தை அபிவிருத்தி செய்தல், தங்கொல்ல, ஹீரஸ்ஸகல நீர் சேவை தாங்கிகள் நிர்மாணம், ஹீரஸ்ஸகல நீர் பம்பிகூடம் இரண்டினை நிர்மாணித்தல் நாகஸ்தென்ன, மிரிஸ்வத்த, தங்கொல்ல பிரதேசங்களில் 05 சிறிய நீர் பம்பிக் கூடங்களை நிர்மாணித்தல், நீர் வழங்கல் மென்பொருளை அபிவிருத்தி செய்தல் போன்ற உப செயற்றிட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | |

| | | | |
|---|---|---|---|
| | (ii) செயற்திட்டம் மூலம் 04 தொலைத்தொடர்பு நிலையங்களை நிர்மாணிப்பதற்கு திட்மிடப்பட்டிருந்த போதிலும் ஹீரஸ்ஸகல தொலைத்தொடர்பு நிலையம் மாததிரம் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் 30 கிலோமீற்றர் வீதியை மறுசீரமைப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 13.73 கிலோமீற்றர் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. | | |
| (எ) | செயற்திட்டத்தின் மூலம் அ.டொலர் 5.5 மில்லியனுக்கு சமமான ரூபா 715 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. கண்டி நகரத்தில் பழைய கழிவுப் பொருள் குழாய் முறைமை மகாவலி ஆற்றிற்கு தொடர்புபடுத்தப்பட்டிருந்ததுடன் அது மத்திய வாய்க்காலில் அமைந்துள்ள கழிவு நீர்க் குழாய் முறைமையை மறுசீரமைக்கும் இந்த செயற்திட்டத்தின் நோக்கமாக இருந்தது. எனினும் தனியார் கழிவுப் பொருள் குழாய் வீதி ஊடாக அனுப்பப்பட்டிருந்த செயற்றிட்ட காலத்தில் அனுப்பப்பட்டிருந்தமை செயற்றிட்ட காலத்தின் போது அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் கழிவுப் பொருட்களை அகற்றும் நிறுத்தி பிரதான வடிகாண் முறைமையை மறுசீரமைக்கும் யெற்பாடுகளை மேற்கொள்வதற்காக ரூபா 2,351.9 மில்லியன் செலவில் 05 உப செயற்றிட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருந்தது. | செயற்றிட்டத்தின் மூலம் தயாரிக்கப்பட்ட 2022.06.10 ஆம் திகதிய இந்த அவதானிப்பை அமுல்படுத்தும் பூர்த்தி அறிக்கை மற்றும் 2022 ஆகஸ்ட் மாதம் உலக வங்கி அமுல்படுத்தும் பூர்த்தி அறிக்கை மூலம் தெளிவாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. | பொது மக்களுக்கு எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் மற்றும் நலன்களை அடைந்து கொள்வதற்காக செயற்திட்ட கால எல்லையில் கடன் நிதியத்தை ஆக்கபூர்வமானதாக பயன்படுத்துதல் வேண்டும். |
| | அதன் விளைவாக கழிவுப் பொருள் இந்த குழாய் வீதிகளுக்கு விடுவித்து கழிவுப் பொருள் மகாவெளி கங்கையில் விடுவிப்பட்டதன் காரணமாக இந்த செயற்றிட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகையை விட 229 சதவீதம் மேலதிகமாக செலவிடப்பட்டிருந்தது. | | |
| (ஏ) | கூறு இலக்கம் 1.4 இன் கீழ் கண்டி நகரத்தை அபிவிருத்தி செய்வதற்காக 06 உப கூறுகள் அமுல்படுத்துவதற்காக அ.டொலர் 24.05 மில்லியனுக்கு சமமான ரூபா 3,126.50 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும் 06 உப கூறுகளில் 02 கூறுகள் மாத்திரம் அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 2,202.71 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | செயற்றிட்டத்தின் மூலம் தயாரிக்கப்பட்ட 2022.06.10 ஆம் திகதிய இந்த அவதானிப்பை அமுல்படுத்தும் பூர்த்தி அறிக்கை மற்றும் 2022 ஆகஸ்ட் மாதம் உலக வங்கி அமுல்படுத்தும் பூர்த்தி அறிக்கை மூலம் தெளிவாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. | பொது மக்களுக்கு எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் மற்றும் நலன்களை அடைந்து கொள்வதற்காக செயற்திட்ட கால எல்லையில் கடன் நிதியத்தை ஆக்கபூர்வமானதாக பயன்படுத்துதல் வேண்டும். |
| | (i) இந்த செயற்றிட்டத்தின் கீழ் அ.டொலர் 8.1 மில்லியன் செலவில் மத்திய வாய்க்கால் பழைய தபால் அலுவலகத்தை புனரமைக்கும் வேலைத்திட்டம், கிறீன் நகர புனர்வாழ்வு நிகழ்சித்திட்டம், கண்டி பிரதான திட்டம், மற்றும் வடிவமைத்தல். மற்றும் மேற்பார்வை சேவைகளை அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் அந்த வேலை நடவடிக்கைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | |

| | | | |
|---|---|---|---|
| | (ii) வரலாற்று மற்றும் கலாசார மாவட்டங்களை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக அ.டொலர் 5.5 மில்லியனுக்குச் சமமான ரூபா 715 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அதன் கீழ் அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்ட 04 செயற்பாடுகளில் ஒரு செயற்பாடு மாத்திரம் அமுல்படுத்துவதற்காக ரூபா 1,633.63 மில்லியன் அதாவது 128 சதவீதம் செலவிடப்பட்டிருந்தது. | | |
| 02 | **கூறு 02 – காலி நகர அபிவிருத்தி** | | |
| (அ) | காலி நகரத்தில் நீர் போக்குவரத்து மற்றும் வெள்ள நீரை கட்டுப்படுத்துவதற்காக அ.டொலர் 26.52 மில்லியனுக்குச் சமமான 3,447.60 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. கூறு இலக்கம் 2.1 இன் கீழ் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்றிட்டத்தின் மூலம் ரூபா 3,309.99 செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | செயற்றிட்டத்தின் மூலம் தயாரிக்கப்பட்ட 2022.06.10 ஆம் திகதிய இந்த அவதானிப்பை அமுல்படுத்தும் பூர்த்தி அறிக்கை மற்றும் 2022 ஆகஸ்ட் மாதம் உலக வங்கி அமுல்படுத்தும் பூர்த்தி அறிக்கை மூலம் தெளிவாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. | பொது மக்களுக்கு எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் மற்றும் நலன்களை அடைந்து கொள்வதற்காக செயற்திட்ட கால எல்லையில் கடன் நிதியத்தை ஆக்கபூர்வமானதாக பயன்படுத்துதல் வேண்டும். |
| | (i) மொறகொட வாய்க்கால், மோடஎல மற்றும் குறுக்கு வாய்க்கால் மறுசீரமைத்தல் காலி மாநகரசபை எல்லையில் வெள்ள நீரை கட்டுப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்ததுடன் அதற்காக அ.டொலர் 26.52 மில்லியன் அதாவது ரூபா 3,447.60 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும் எதிர்பார்க்கப்பட்ட துார மீற்றர் 4,250 நீளத்தில் 1,850 மீற்றர் மாத்திரம் மறுசீரமைக்கப்பட்டிருந்தடன் அதனால் எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது. இந்த செயற்றிட்டத்தை பூர்த்தி செய்து 10 மாதங்கள் கடப்பதற்கு முன்னர் 2023 ஒக்டோபர் மாதத்தின் போது காலி நகரத்தில் ஏற்பட்ட வெள்ள நிலமை அதனை மேலும் உறுதிப்படுத்தியது.<br><br>மேலும் மொறகொடஎல மற்றும் மொறகொட எல பராமரித்தல் மாகாண நீர்ப்பாசன திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. எனினும் அந்த திணைக்களத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட வெள்ள நீர் கட்டுப்படுத்தல் உரிய பிரகாரம் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் சேற்றுமண் சேர்ந்தமை மற்றும் கழிவு நீர் பிரதேசத்தில் அனேகமாக பரவி இருந்தது. | | |
| | (ii) பாலம் மறுசீரமைப்பதற்காக ரூபா 650 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும், ரூபா 841.92 மில்லியன் செலவில் மொறகொட வாய்க்கால் மற்றும் வாய்க்கால் சார்ந்த பாலத்தை நிர்மாணிக்கும் 08 வேலைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பாலத்தை நிர்மாணிப்பதற்காக மதிப்பீட்டினை விட ரூபா 200 மில்லியன் அளவில் பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. எனினும், ஆரம்ப கட்டத்தின் போது மொறகொட எல மற்றும் மோட எல தொடர்பான 03 | | |

| | | |
|---|---|---|
| பாலங்கள் மாத்திரம் இணங்கானபட்டிருந்த போதும் செயற்திட்டத்தை பூர்த்தி செய்யும் வரையில் 08 பாலங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. | | |
| (iii) காலி மாநகர சபை நீர் வடிகாலமைப்பை நிர்மாணிக்கும் 05 செயற்திட்டங்களுக்காக ரூபா 1,126.09 மில்லியன் ஒதுக்கியிருந்த போதிலும் ரூபா 672.1 மில்லியன் பெறுமதியான 02 செயற்திட்டங்கள் முழுமையாக அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) காலி நகரத்தை அபிவிருத்தி செய்வதற்காக கூறு இலக்கம் 2.2 இன் கீழ் அ.டொலர் 16.88 மில்லியனுக்கு சமனான ரூபா 2,194.40 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் செயற்திட்டத்தின் மூலம் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,626.36 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | செயற்றிட்டத்தின் மூலம் தயாரிக்கப்பட்ட 2022.06.10 ஆம் திகதிய இந்த அவதானிப்பை அமுல்படுத்தும் பூர்த்தி அறிக்கை மற்றும் 2022 ஆகஸ்ட் மாதம் உலக வங்கி அமுல்படுத்தும் பூர்த்தி அறிக்கை மூலம் தெளிவாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. | பொது மக்களுக்கு எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் மற்றும் நலன்களை அடைந்து கொள்வதற்காக செயற்திட்ட கால எல்லையில் கடன் நிதியத்தை ஆக்கபூர்வமானதாக பயன்படுத்துதல் வேண்டும். |
| (i) காலி நகர அபிவிருத்தியின் கீழ் சிற்றி சென்ரர் பிரதேசத்தையும் அபிவிருத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அந்த செயற்திட்டத்தில் 06 உப செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (ii) காலி நகர அபிவிருத்தியின் கீழ் சீன கோட்டை பிரதேசத்தை அபிவிருத்தி செய்வதற்கும் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அந்த செயற்திட்டத்தில் 05 உப செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (iii) ஆலோசனை கம்பனியால் மொறகொட வாய்க்கால் கரையோரத்தில் வெள்ள நீரை கட்டுப்படுத்தும் எட்டு இடங்கள் இனங்காணப்பட்டிருந்த போதிலும் உலர்நில முகாமைத்துவ திட்டத்தை தயாரிப்பதற்காக இந்த இடங்களை அபிவிருத்தி செய்வதற்காக காணி மேற்கொள்ளும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு செயற்திட்டம் தவறியிருந்தது. பிரதேசத்தில் அமைந்துள்ள காணிகளை கைப்பற்றுதல் அதிகார சபைகளுடன் ஏற்படுத்தப்பட்ட நிறுவனங்களுடன் சரியான தொடர்பினை பேணாமையின் காரணமாக காணி கைப்பற்றும் நடவடிக்கைகள் கைவிடப்பட்டிருந்தது. காலி நகரத்தில் வெள்ள நீரைக் கட்டுப்படுத்தும் மலக்கழிவு அகற்றும் 16 முறைமைகளை நிர்மாணிக்கும் செயற்பாடுகள் காணி கைப்பற்றுதலில் உள்ள பிரச்சினைகளின் காரணமாக ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. இந்த நிலைமை செயற்திட்டத்தின் நோக்கங்களை அடைந்துகொள்வது தொடர்பில் அதிகளவில் தாக்கமளித்திருந்தது. | | |

(iv) காலி தர்மபால பூங்காவை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 270.85 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் அந்த செயற்திட்டத்தின் ஆரம்ப கட்டத்தின் போது அந்த செயற்திட்டத்தில் அதே செயற்திட்டத்தின் ஆரம்ப கட்டத்தின் போது இனங்காணப்பட்டிருக்காத போதிலும் கூறு இலக்கம் 2.2 கீழ் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அந்த பூங்காவில் மின் பிறப்பாக்கி இயந்திரம் ஒன்றை பொருத்தும் ஒப்பந்தத்திற்காக 2021 திசெம்பர் 17 ஆந் திகதி தனியார் கம்பனி ஒன்றுடன் ரூபா 2.39 மில்லியன் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் இயந்திரத்திற்காக வழங்கப்பட்டுள்ள 28 நாட்களில் உள்ளடக்கி பொருத்தமானதை தீர்மானிக்கப்பட்டிருந்தது. 2023 சனவரி 23 ஆந் திகதி அந்த இயந்திரம் வழங்கப்பட்டிருந்தது. எனினும் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்த பெறுமதியில் இயந்திரத்தை வழங்குவதற்கு முடியாது இருந்தமையால் வழங்குனரால் ரூபா 4.53 மில்லியன் திருத்தப்பட்ட தொகையொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இந்த முரண்பாடுகள் 93 சதவீதம் அளவானதாக இருந்ததுடன் பெறுகை குழுவின் அங்கீகாரம் பெறுகை குழுவில் ஒரு அங்கத்தவர்களின் இணக்கப்பாட்டின் மாத்திரம் வழங்கப்பட்டிருந்ததுடன் திருத்தப்பட்ட உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை அது கணக்காய்வின் போது பிரச்சினைக்குரியதாக இருந்தது.

03 **கூறு 04 – யாழ்ப்பாண நகர அபிவிருத்தி**

| | | |
|---|---|---|
| (அ) கூறு 4.1 இல் இலக்காக யாழ்ப்பாணம் நகரத்தில் மோட்டார் போக்குவரத்து முகாமைத்துவம் மற்றும் பொது போக்குவரத்தை அபிவிருத்தி செய்வதாக இருந்ததுடன் அதற்காக அ.டொலர் 15.50 மில்லியனுக்கு சமனான ரூபா 2,299.73 மில்லியன் (2016.12.31 ஆந் திகதிய நாணய மாற்று வீதத்தின் படி) ஒதுக்கப்பட்டிருந்தது. 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்திற்காக ரூபா 2,383.70 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | செயற்றிட்டத்தின் மூலம் தயாரிக்கப்பட்ட 2022.06.10 ஆம் திகதிய இந்த அவதானிப்பை அமுல்படுத்தும் பூர்த்தி அறிக்கை மற்றும் 2022 ஆகஸ்ட் மாதம் உலக வங்கி அமுல்படுத்தும் பூர்த்தி அறிக்கை மூலம் தெளிவாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. | பொது மக்களுக்கு எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் மற்றும் நலன்களை அடைந்து கொள்வதற்காக செயற்திட்ட கால எல்லையில் கடன் நிதியத்தை ஆக்கபூர்வமானதாக பயன்படுத்துதல் வேண்டும். |

(i) கூறு இலக்கம் 4.1.1 இன் கீழ் பருத்தித்துறையில் முதல் கொடிகாமம் வரை 14 Km யாழ்ப்பாணத்தில் இருந்து பொன்னை வரை 16 km என்பவற்றை அபிவிருத்தி செய்வதற்காக அ.டொலர் 15.20 க்கு சமனான ரூபா 2,255 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும், யாழ்ப்பாணம் முதல் பொண்ணை வரை சூயான பகுதியை அபிவிருத்தி செய்வதற்காக மூபா 893.45 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் செயற்திட்டத்தின் இறுதியில் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

| | | |
|---|---|---|
| மேலும் 2023 யூன் 14 ஆந் திகதி அமைச்சினால் ரூபா 13.69 மில்லியன் ஒப்பந்தகாரருக்கு செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அந்த பட்டியலில் 61 நாட்களுக்காக தாமத கட்டணமாக ரூபா 43.27 மில்லியன் குறைக்கப்பட்டிருந்தது. எனினும், வேலை பூர்த்தி செய்தல் சான்றிதழின் பிரகாரம் 296 நாட்களுக்காக தாமதக் கட்டணமாக ரூபா 210 மில்லியன் அறவிட வேண்டியிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் செயற்திட்டத்திற்கு ரூபா 166.72 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்தது. | | |
| (ii) யாழ்ப்பாண நகரத்திற்காக மோட்டார் வாகன முகாமைத்துவம் மற்றும் பொது போக்குவரத்திற்காக திட்டங்களை தயாரிப்பதற்காக அ.டொலர் 0.30 மில்லியனுக்கு சமனான 44.51 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் 4.1.2 கூறின் கீழ் அந்த முழுமையான செயற்திட்டம் அமுல்படுத்தப்படவில்லை. | | |
| (ஆ) யாழ்ப்பாண நகரத்தில் நீர் வடிகாலமைப்பு முறையை அபிவிருத்தி செய்யும் கூறு நோக்கமாக இருந்ததுடன் அதற்காக அ.டொலர் 21.5 மில்லியனுக்கு சமமான ரூபா 3.189.95 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தின் மூலம் ரூபா 223.08 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது. | செயற்றிட்டத்தின் மூலம் தயாரிக்கப்பட்ட 2022.06.10 ஆம் திகதிய இந்த அவதானிப்பை அமுல்படுத்தும் பூர்த்தி அறிக்கை மற்றும் 2022 ஆகஸ்ட் மாதம் உலக வங்கி அமுல்படுத்தும் பூர்த்தி அறிக்கை மூலம் தெளிவாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. | பொது மக்களுக்கு எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் மற்றும் நலன்களை அடைந்து கொள்வதற்காக செயற்திட்ட கால எல்லையில் கடன் நிதியத்தை ஆக்கபூர்வமானதாக பயன்படுத்துதல் வேண்டும். |
| (i) கூறு இலக்கம் 4.2.3, 4.2.4, 4.2.5, 4.2.6 மேற்பார்வை சேவைகள், நீர் வடிகாலமைப்பு பிரதான திட்டம் முன்னுரிமை முதலீடுகளில் விரிவான திட்டம், நீர் வடிகாலமைப்பு பிரதான திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட முன்னுரிமை முதலீடு, நீர்வடிகாலமைப்பை அமுல்படுத்துதல் மற்றும் பராமரிப்பதற்கான உபகரணங்கள் போன்ற நடவடிக்கைகளுக்காக அ.டொலர் 11.9 மில்லியனுக்கு சமமான ரூபா 1,766 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அதன் நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |
| (ii) காணப்படுகின்ற வடிகாண் முறைமையை மறு சீரமைப்பதற்காக அ.டொலர் 4.80 மில்லியனுக்கு சமனான ரூபா 712 மில்லியன் ஒதுக்கபப்பட்டு இருந்தது. ரூபா 88.85 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் கூறு இலக்கம் 4.2.1 இன் கீழ் 04 வடிகால் முறைமையை அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தது. | | |

| | | | |
|---|---|---|---|
| | (iii) கூறு இலக்கம் 4.2.2 இன் கீழ் தடாக ஓரங்களை மறு சீரமைத்தல் மற்றும் சேற்று மண்ணை அகற்றும் செயற்பாடுகளுக்காக அ.டொலர் 4.5 மில்லியனுக்கு சமனான ரூபா 668 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும், ரூபா 141 மில்லியன் செலவில் செயற்திட்டம் இறுதியில் உப செயற்திட்டம் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. | | |
| (இ) | கூறு 4.3 இன் கீழ் அ.டொலர் 21.9 மில்லியனுக்கு சமனான ரூபா 3,249 மில்லியன் ஒதுக்கப்பட்டிரூந்ததுடன் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 183.95 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | செயற்றிட்டத்தின் மூலம் தயாரிக்கப்பட்ட 2022.06.10 ஆம் திகதிய இந்த அவதானிப்பை அமுல்படுத்தும் பூர்த்தி அறிக்கை மற்றும் 2022 ஆகஸ்ட் மாதம் உலக வங்கி அமுல்படுத்தும் பூர்த்தி அறிக்கை மூலம் தெளிவாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. | பொது மக்களுக்கு எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் மற்றும் நலன்களை அடைந்து கொள்வதற்காக செயற்திட்ட கால எல்லையில் கடன் நிதியத்தை ஆக்கபூர்வமானதாக பயன்படுத்துதல் வேண்டும். |
| | (i) கூறு இலக்கம் 4.3.4 இன் கீழ் நகர விநோத பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதற்காக அ.டொலர் 4.8 மில்லியனுக்கு சமனாக ரூபா 712 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. ரூபா 84.90 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் யாழ்ப்பாணத்தின் நகர பூங்கா மறுசீரமைப்பு செயற்பாடுகள் - கட்டம் 02 (பாசை ஊர் பூங்கா) 2022 திசெம்பர் 31 வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| | (ii) கூறு இலக்கம் 4.3.1 – கலாசார மரபுரிமைகளுக்காக அ.டொலர் 4.8 மில்லியன், கூறு இலக்கம் 4.3.2 - நகர வீதிகளுக்காக அ.டொலர் 4.5 மில்லியன், கூறு இலக்கம் 4.3.3 – நடமாட்டத்தை மேம்படுத்துவதற்காக அ.டொலர் 2.7 மில்லியன், யாழ்ப்பாண நகர பிரதேசத்திற்காக அ.டொலர் 3 மில்லியன் மற்றும் கூறு இலக்கம் 4.3.7 இற்காக அ.டொலர் 15.4 மில்லியன் என்பன ஒதுக்கப்பட்டிருந்த போதும் அந்த செயற்திட்டம் எதுவும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | கூறு இலக்கம் 4.4 இன் கீழ் இயலளவை கட்டியெழுப்புவதற்காக யாழ்ப்பாண மாநகர சபைக்கு அ.டொலர் 2.05 மில்லியன் அதாவது ரூபா 304 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதும் இயலளவை கட்டியெழுப்பும் நிகழ்ச்சித்திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | செயற்றிட்டத்தின் மூலம் தயாரிக்கப்பட்ட 2022.06.10 ஆம் திகதிய இந்த அவதானிப்பை அமுல்படுத்தும் பூர்த்தி அறிக்கை மற்றும் 2022 ஆகஸ்ட் மாதம் உலக வங்கி அமுல்படுத்தும் பூர்த்தி அறிக்கை மூலம் தெளிவாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. | பொது மக்களுக்கு எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் மற்றும் நலன்களை அடைந்து கொள்வதற்காக செயற்திட்ட கால எல்லையில் கடன் நிதியத்தை ஆக்கபூர்வமானதாக பயன்படுத்துதல் வேண்டும். |

## 3.2 பயனற்ற செலவினம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
| --- | --- | --- |
| அமுல்படுத்துவதற்கு வசதியீனத்தின் காரணமாக காலி நகரத்தில் வெள்ள நீரை கட்டுப்படுத்தும் ஒப்பந்தம் கைவிடப்பட்டிருந்தது. ஆதன் காரணமாக வடி வமைத்தல் நிர்மாணத்திற்காக ஆலோசனையாளர்களுக்கு செலுத்தப்பட்ட ரூபா 21.49 மில்லியன் பயன் அற்ற செலவினத்திற்கு இருந்தது. | இந்த ஆலோசனை ஒப்பந்தம் மதிப்பீட்டு திட்டம் மற்றும் வாய்க்கால்களை அபிவிருத்தி செய்வதற்காக வெள்ள நீரை கட்டுப்படுத்தும் நிர்மாணத்திற்காக இருந்ததுடன் பல்வேறு காரணங்களினால் சில வாய்க்கால்கள் கைவிடப்பட்டிருந்தது. | கடன் நிதியத்தை கைத்திறனாக பயன்படுத்துதல் வேண்டும். |